Reg. No. : ......................................

Name : ...........................................

**FY-812**

**IMPROVEMENT / SUPPLEMENTARY EXAMINATION, OCTOBER 2022**

Part – II

**TAMIL**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்குள் எவையேனும் எட்டனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம்**

**(8 × 1 = 8)**

1. ஆண்கள் குழுவாக இணைந்து ஆடும் ஆட்டம்

(அ) மயிலாட்டம் (ஆ) தெருக்கூத்து

(இ) வில்லுப்பாட்டு (ஈ) ஒயிலாட்டம்

2. "யாதும் ஊரே! யாவரும் கேளிர்!

தீதும் நன்றும் பிறர்தர வாரா"

இப்பாடலடிகள் இடம் பெறும் நூல்

(அ) அகநானூறு (ஆ) ஐங்குறுநூறு

(இ) புறநானூறு (ஈ) நாலடியார்

3. ஒன்றைப் புகழ்வது போலப் பழித்தும் பழிப்பது போல புகழ்ந்தும் கூறும் அணி

(அ) உவமையணி (ஆ) வஞ்சப்புகழ்ச்சி அணி

(இ) உருவக அணி (ஈ) தன்மையணி

4. 'சொல்லாக் கதை' என்னும் கவிதையைப் படைத்தவர்.

(அ) தமிழச்சி

(ஆ) அ.வெண்ணிலா

(இ) சல்மா

(ஈ) திலகபாமா

5. காலம் மறைந்து வரும் தொகை.

(அ) வினையெச்சம் (ஆ) வினைத்தொகை

(இ) பண்புத்தொகை (ஈ) வினையாலணையும் பெயர்

6. பாரதியார் மீது கொண்ட பற்றினால் தம் இயற்பெயரை மாற்றிக் கொண்ட கவிஞர்

(அ) கண்ணதாசன் (ஆ) வண்ணதாசன்

(இ) பாரதிதாசன் (ஈ) இவர்களுள் எவருமில்லை

7. கவிஞர் வைரமுத்து எழுதிய நூல்களுள் ஒன்று

(அ) எஞ்சோட்டுப் பெண் (ஆ) ஆனைச்சந்தம்

(இ) நீரில் எரியும் நெருப்புகள் (ஈ) மூன்றாம் உலகப் போர்

8. 'தமிழின் பயண இலக்கிய முன்னோடி' என்று சிறப்பிக்கப்படுபவர்.

(அ) ஏ.கே. செட்டியார் (ஆ) மணியன்

(இ) கமலநாதன் (ஈ) அசோகமித்திரன்

9. ஒன்றை அதன் தன்மை கொண்ட மற்றொன்றோடு ஒப்பிட்டுக் கூறுவது

(அ) உருவகம் (ஆ) உவமை

(இ) தன்மை (ஈ) தீவகம்

10. தெய்யம் கலை வடிவத்தில் முக ஒப்பனையை எவ்வாறு அழைப்பர்.

(அ) வெட்டோடை (ஆ) தோற்றப்பாட்டு

(இ) சங்கெழுத்து (ஈ) கிரீடம்

**11 முதல் 18 வரையுள்ள வினாக்களுக்குள் எவையேனும் ஆறனுக்கு இரண்டு வாக்கியங்களில் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம்**

**($6 \times 2 = 12$)**

11. 'பண்படுதல்' என்ற சொல்லின் இரு பொருள்களைக் குறிப்பிடுங்கள்

12. மங்கல வாழ்த்தில் பேசப்படும் மணமக்களின் பெயர்களை எழுதுங்கள்.

13. சி.வை. தா வின் இலக்கியப் பதிப்புகளை எடுத்தெழுதுங்கள்
(நீதிநெறி விளக்கம், தொல்காப்பியம், தணிகைப்புராணம், வீரசோழியம்)

14. நிலச்சரிவைத் தடுப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் இரண்டினை எழுதுங்கள்.

15. பின்வருவனவற்றுள் கேரள நாட்டுப்புறக் கலைகளை எடுத்தெழுதுங்கள்.
(வில்லுப்பாட்டு, படையணி, ஒயிலாட்டம், தெய்யம்)

16. கலித்தொகை உணர்த்தும் பண்பாட்டுச் செய்திகளில் இரண்டினை எழுதுங்கள்.

17. பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.

(அ) இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை வலுப்படுத்துவது படையணி நடன வழிபாடு.

(ஆ) தமிழக நாட்டுப்புறக் கலைகளில் ஒன்று படையணி

(இ) சுற்றுச்சூழலுக்கு நன்றி தெரிவிக்கும் வழிபாடு படையணி

18. 'திங்கள்' என்ற சொல்லின் இரு பொருள்களை எழுதுங்கள்.

**19 முதல் 25 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 5 வினாக்களுக்கு அரைப்பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம்**

**(5 × 4 = 20)**

19. கீழ்க்காணும் கவிதையை வாசித்து விமர்சனக் குறிப்பு எழுதுங்கள்.

"கணக்கிலடங்காக் கமிஷன் படிகளும்
பீஸூ பீஸாகப் பிச்சுப் புடுங்கும்
கோர்ட்டில் சென்று குதித்திட வேண்டாம்
குதித்துக் குடியை முடித்திட வேண்டாம்"

20. நவீனத்துவம் முன்வைத்துள்ள கருத்து நிலைகளில் நான்கினை வரிசைப்படுத்தி எழுதுங்கள்.

21. தமிழகக் கலை வடிவமான வில்லுப்பாட்டு குறித்து விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.

22. "மனிதர்கள் இல்லாத உலகத்தில் விலங்ககளும் பறவைகளும் வாழமுடியும். ஆனால் மனிதனால் வாழ முடியுமா விலங்குகளும் பறவைகளும் இல்லாத உலகத்தில்" என்ற வைரமுத்துவின் வரிகளுக்கு விவாதக் குறிப்பு எழுதுங்கள்.

23. உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தைத் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்ற வருகை தரும் திரு. கவிஞர் சிற்பி அவர்களுக்கு வரவேற்புரை தயார் செய்யுங்கள்.

24. ‘நாடகம்’ என்ற தலைப்பில் பெட்டிச் செய்தி தயார் செய்யுங்கள்.

25. ‘புனலும் மணலும்’ என்ற சிறுகதையை மையப்படுத்தி, ‘ஆறு அன்றும் இன்றும்’ என்ற தலைப்பில் வானொலி உரை தயார் செய்யுங்கள்.

**26 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 4 வினாக்களுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம். (4 × 6 = 24)**

26. ‘இயற்கைப் பேரிடர்: காரணங்களும் தீர்வுகளும்’ என்ற தலைப்பில் பத்திரிகைத் தலையங்கம் தயார் செய்யுங்கள்.

27. கீழே தரப்பட்டுள்ள பாடல்களைப் படித்து ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுங்கள்

“பொருதடக்கை வாளெங்கே மணி மார்பெங்கே
போர் முகத்தில் எவர்வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே எங்கே என்று
பயிரவியை கேட்பாளைக் காண்மின் காண்மின்”

– கலிங்கத்துப்பரணி

“இத்தனிப் போரில் நீர் ஏற்றிடும் காயம்
சித்தங்களித்து ஐயமா துமக்கு
முத்தமிட் டளித்த முத்திரை ஆகி
எத்தனை தலைமுறைக் கிலக்காய் நிற்கும்!
போர்க்குறி காயமே புகழின் காயம்
யார்க்கது வாய்க்கும் ஆ! ஆ! நோக்குமின்”

– மனோன்மணீயம்

28. மணிமேகலை குறிப்பிடும் இந்திரவிழா குறித்த கருத்துகளைத் தொகுத்து எழுதுங்கள்.

29. ‘திரு. சி.வை. தாமோதரம் பிள்ளை: வாழ்வும் பணியும்’ என்ற தலைப்பில் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

30. கீழே தரப்பட்டுள்ள செய்யுளை நயம் பாராட்டி எழுதுங்கள்.

“சொல்லருஞ்சூற் பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல் தலை நிறுவித்தேர்ந்த நூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே”

– திருத்தக்கத் தேவர்

31. பள்ளி இலக்கிய மன்ற நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக வருகை தரவிருக்கும் நகைச்சுவை நடிகர் திரு. வடிவேல் அவர்களை நேர்முகம் காண்பதற்கான ஐந்து வினாக்கள் அடங்கிய வினாநிரல் தயார் செய்யுங்கள்.

32. ‘தரணி போற்றும் தமிழர் பண்பாடு’ என்ற தலைப்பில் சிறுகட்டுரை தயார் செய்யுங்கள்.

**33 முதல் 35 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 2 வினாக்களுக்கு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 8 வீதம்**

**($2 \times 8 = 16$)**

33. மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் பங்கேற்க,

‘பெண்கள்: ‘பிரச்சினைகளும் தீர்வுகளும்’

என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்யுங்கள்.

குறிப்புகள் :

. பெண்ணியம்: நேற்றும் இன்றும்
. பெண்கள் நேரிடும் பிரச்சினைகள்
. பெண்கள் பாதுகாப்பு சட்டங்களும், தீர்வுகளும்
. பெண்களைப் போற்றுவோம்.

34. இயற்கைப் பாதுகாப்பு குறித்து நடைபெறவிருக்கும் விழிப்புணர்வு முகாமில் உரையாற்றுவதற்காக, ‘இயற்கையைப் பாதுகாத்து இன்பமாக வாழ்வோம்’ என்ற தலைப்பில் சொற்பொழிவு தயார் செய்யுங்கள்.

குறிப்புகள் :

. இயற்கை நலனே! மனித நலன்!

. இயற்கையோடு இயைந்த வாழ்வு

. இயற்கைப் பாதுகாப்பு வழிகள்

35. “தமிழ்ச்சங்கத்தில் நடைபெறவிருக்கும் பொங்கல் விழா நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்புரை ஆற்றுவதற்காக, ‘கலைகளும் தமிழர் பண்பாடும்’ என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்யுங்கள்.

குறிப்புகள் :

- ஆய கலைகள் ஆறுபத்து நான்கு
- கலைகள்: ஆன்று முதல் இன்று வரை
- பண்பாட்டின் பிரதிபலிப்புகள்
- கலைகள்-கலைஞர்கள் பாதுகாப்பு